மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த இடத்திலே தொழிற்சாலைகள் இல்லாவிட்டாலும், சேக்தாவுத் அன்ட் சன்ஸ், ஜமால் முகமது அன்ட் சன்ஸ் என்ற இரண்டு கிடங்குகளில் தோல் சேமித்து வைக்கப்படுகின்றன. இதைத் தவிரவும் எலும்புகள் மற்றும் மாட்டுக்கொம்புகள் சேமித்து வைக்கப்படுகின்றன. இந்த எலும்புகளின் கழிவு நீர் சுத்திகரிப்பு எதுவுமின்றி அருகாமையில் தேங்கி குட்டையை அடைகிறது. மேற்கண்ட கிடங்கு, குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளதாலும் தோல் மற்றும், எலும்புகளை ஒட்டியுள்ள அங்கப்பொருட்கள் விற்பனைக்காக சேமித்து வைப்பதால், அழுகி துர்நாற்றம் வீசுவதாலும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப் போதுமான இடங்கள் இல்லாததாலும், இந்தக் கிடங்குகளை நகர எல்லைக்கு வெளியே இட மாற்றம் செய்ய நகர ஆணையருக்குப் பரிந்துரை செய்வது சம்பந்தமாக வாரியம் தொடர்ந்து பரிசீலனை செய்யும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடமாற்றம் செய்வதற்கு நோட்டீஸ் ஏதாவது முனிசிபாலிட்டி மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் எந்தத் தேதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தப்பட்ட குறிப்புகள் என்னிடம் இல்லை. வாரியம் கண்டிப்பாக, நகர ஆணையருக்கு பரிந்துரை செய்து தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

அரசு ஊழியர்கள் வீடுகட்ட வாங்கும் கடன் தொகையின் உச்சவரம்பை அதிகரிக்கும் திட்டம்.

479—(*வினா எண் 12571) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் வீடுகட்ட வாங்கும் கடன் உதவியின் உச்சவரம்பை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

1984 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) மற்றும் (ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 24—9—82 நாளிட்ட அரசு ஆணை வீடுகட்ட வழங்கப்படும் கடனுதவியின் உச்ச வரம்பு ரூ. 1,00.000 லிருந்து ரூ. 1,50,000 ஆகவும் 21—12—1982 நாளிட்ட அரசு ஆணைப்படி வீட்டினை விரிவு படுத்துவதற்காக வழங்கப்படும் முன்பணத்தின் உச்சவரம்பு ரூ. 25,000லிருந்து ரூ. 50,000 ஆகவும் உயர்த்தப்பட்டன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படும் உதவித் தொகை உயர்த்தியிருப்பதாகச் சொன்னார்கள். அதை ஒரே தவணையில் கொடுக்கப்படுமா அல்லது 2, 3 தவணைகளாகப் பிரித்து கொடுக்கப்படுமா ? என்பதை அறியவிரும்புகிறேன். அத்தோடு பல அரசு அதிகாரிகள் பல இடங்களில் வீடு கட்டிவிட்டு, எனக்கு வீடே இல்லை என்று சொல்லி, பொய்ச் சான்றிதழ் கொடுத்து, கடன் வாங்குகிறார்கள். அதைக் கண்காணிக்க அரசு ஏதாவது கண்காணிப்பு ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குவதற்கான முறைகளில் அவர்கள் கேட்கின்ற அளவிற்கு பணம், திருப்பிச் செலுத்துவதற்கான நிலையை தெரிந்து கொண்டு, அவர்களுக்கு கடன் வழங்கப் படுகிறது. ஆனால் பல்வேறு இடங்களில் அரசு ஊழியர்கள் வீடுகள் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி அரசுக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய திறமையை வைத்துக்கொண்டு, அதைக் கண்டுபிடித்து அரசுக்கு தெரிவிப்பார்களானால், அப்படி வாங்கியவர்கள் மீது, அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் வீடு கட்ட, அரசு கடன் கொடுக்கிற அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பென்சன் கொடுக் கப்படுகிறது. அந்தப் பென்சன் தொகையை வைத்துக் கொண்டு எவ்வளவு தூரம் கடன் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், மாஜிமந்திரி கள், தற்போதுள்ள மந்திரிகள் ஆகியோருக்கு இந்த வீடு கட்ட கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், அவருக்கே உரியமுறையில் இந்தத் கேள்வியை அமைந்திருக்கிறார்.

யாரையும் இங்கேவிடாமல், அத்தனை பேர்களையும் சொல்லி விட்டார்கள். பத்திரிகைக்காரர்களை மட்டும் விட்டுவிட்டார். அவர்களையும் சேர்த்து இருந்தால், அத்தனை பேர்களுக்கும் கடன் கொடுக்கின்ற ஒரு வேலையைப் பார்க்கிற ஒரு நிலையாக இருந்து இருக்கும். தாமரைக்கனியினுடைய சிந்தனை நிச்சயமாக காலத்தாலே ஏற்றுக்கொள்ளப்படும். அந்தச் சிந்தனை வளர வேண்டிய சிந்தனை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் தங்களுக்கு வீடு கட்ட மனுச் செய்கின்ற நேரத்தில், அந்தக் கடன் அவர்களுக்கு சாங்க்சன் செய்வதற்கு பல ஆண்டுகள் ஆகிறது. ஆகவே அப்படி காலதாமதம் ஆகிற நேரத்தில், அவர்கள் காலத்தே கொடுத்த, எஸ்டிமேட் தொகையைவிட அதிகமாகச் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலை வருகிறபோது அரசு ஊழியர்களுக்கு கடன் அளிக்கும்போது அவர்கள் கேட்ட தொகையைவிட 20 சதவிகிதம் அல்லது 10 சதவிகிதம் அதிகமாகக் கடன் கொடுக்கப்படுமா? அதோடு கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட கடன்கள் பாதிவரை தான் கொடுக்கப்பட்டு இப்போது நிறுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அப்படி நிறுத்தப்பட்ட தொகையை தற்போது அளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடன் வழங்குவதிலே காலதாமதம் என்பது நிச்சயமாக ஏற்படுவதில்லை. ஆனால் கடன் வழங்குவதற்கு முன்னாலே பார்க்க வேண்டிய பல்வேறு பரிசீலனைகள் இருக்கிற காரணத்தாலே, பல்வேறு இடங்களிலேயிருந்து வருகிற அந்த மனுக்கள் முதலிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு அதற்குப் பிறகு அரசுக்கு வருகிற காரணத்தாலே, அதை முறைப்படுத்தி வைத்து, அவர்களுக்குரிய கடன்களைத் தருகிறோம். இப்படிப்பட்ட கடன்களை அளிக்கின்ற நேரத்திலே அதை ஆண்டுக்காண்டு அதிகப் படுத்தித்தான் தருகிறோம். அது தற்போது 50,000லிருந்து 1 லட்சத்து 50 ஆயிரம் வரை உயர்த்தப்பட்டிருக்கிறது. விலை வாசி உயர்கிற அளவிற்கு கடன் தொகையும் உயர்த்தப்படுகிறது. தாமதம் இருக்கிறது என்கிற நிலை கிடையாது. ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு பணம் கடன் தரவேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கப்படுகிறது. இந்த ஆண்டு 9 கோடி ரூபாய் கடன் தரவேண்டும் என்று உச்ச வரம்பு விதிக்கப்பட்டது. அந்தத் தொகை அத்தனையும் செலவழிக்கப்பட்டிருக்கிறது.